மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருச்சுழி.

**அசல் வழக்கு எண். 247 /2021**

வாதி/பிரதிவாதி சாட்சியின் வாக்குமூலம் (1873ம் ஆண்டு சாட்சியச்சட்டம் 44வது பிரிவு 5ஆவது விதியின் ஏற்பாட்டின்படி) திருமதி.R.கலைச்செல்வி, கிரேடு III என்பவரால் ஆணையிட்டு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர் : செல்வமோகன் (பி.வா.சா.1) | சாதி : |
| த/பெ.க/பெ : | மதம் : |
| கிராமம் : | தொழில் : |
| தாலுகா : | வயது : |

25.09.2025

**குறுக்குவிசாரணை தொடர்ச்சி –**

1. வாதிகள் பிராதோடு தாக்கல் செய்துள்ள வரைபடம் சரியாக உள்ளதா என்றால் சரிதான். அது **வாசாஆ 8** ஆக குறியீடு செய்யப்படுகிறது. நான் உரிமை கேட்பது சர்வே எண். 23/61 என்றால் சரிதான். தாவா சொத்திற்கு வடக்கே உள்ளது என்றால் சரிதான். நான் எத்தனை செண்டிற்கு உரிமை கோருகிறேன் என்றால் 3 3/4 செண்டிற்கு உரிமை கோருகிறேன். பிவாசாஆ1ல் 5வது இலக்க சொத்திற்கு கிழக்கு மேற்கு 65 அடி, தெற்கு வடக்கு 25அடி குறிப்பிடப்பட்டுள்ளது. நான் 65 அடி என்று தவறாக சொல்கிறேன் என்றால் பிவாசாஆ1ல் 300அடி என்று உள்ளது என்றால் அது தவறாகும். கிழமேல் வீதிக்கும் மேற்கு, சிவசுப்பிரமணியன், நாராயணன், மூக்காண்டி நிலத்திற்கும் கிழக்கு, முத்துஇருளாண்டி இடத்திற்கும் வடக்கு, கண்மாய்க்கும் தெற்கு என்றால் நான்குமாலில் உள்ள அந்த சொத்துக்கள் என்ன சொத்துக்கள் என்று எனக்கு ஞாபகமில்லை. நான் தாக்கல் செய்துள்ள பிவாசாஆ1 தாவா சொத்து சேரவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்தில் முதலில் கூரை வீடு, ஓட்டு வீடு இருந்துள்ளதாக தெரிவித்துள்ளதில் அதன் கதவு எண் தெரியுமா என்றால் அது 70 வருடங்களுக்கு முன்பு இருந்து வருகிற வீடு கதவு எண் தெரியாது. வீடு இருந்ததாக எனது முன்னோர்கள் சொன்னார்கள். வீட்டு வரி ரசீது நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். தாவா சொத்து தற்போது காலி இடமாக உள்ளது என்றால் சரிதான், ஓடு இறக்கி வைத்துள்ளேன். 1ம் பிரதிவாதி, 2ம் பிரதிவாதிக்கு தாவா சொத்து பாத்தியம் ஆகும்.

2. எனது உடன் பிறந்த சகோதரி அமுதவல்லிக்கு தாவா சொத்தில் உரிமை கிடையாது. எனது அப்பா பெயர் ராஜேந்திரன். ராஜேந்திரன் ஒரே ஆண் மகன் ஆவார்.

ராஜேந்திரனுக்கு எந்த காலத்திலும் பட்டா இல்லை என்றால் எனது அப்பா காலத்தில் மனு கொடுத்தேன். எனது அப்பா ராஜேந்திரன் எப்போது இறந்தார் என்றால் 20 வருடங்கள் இருக்கும். எனது அப்பா பெயரில் பட்டா இல்லை. எனது அப்பா ராஜேந்திரன் அனுபவம் செய்ததற்கு எந்த ஆவணம் இல்லை என்றால் சரிதான். எனது அப்பாவின் அப்பா பெயர் சண்முகசுந்தரம் ஆகும். சண்முகசுந்தரம் பெயரில்தான் கிரையப்பத்திரம் உள்ளது. சண்முகசுந்தரம் யாரிடம் இருந்து கிரையம் பெற்றார் என்றால் சிகப்பியம்மாளிடம் இருந்து கிரையம் பெற்றுள்ளார்.

3. நான் தாவா சொத்திற்கு எனக்கு பட்டா கொடுங்கள் என்று வருவாய் கோட்டாட்சியரிடம் கொடுத்தேன். நான் 10ம் வகுப்பு வரை படித்துள்ளேன். பிவாசாஆ 2 வருவாய் கோட்டாட்சியரிடமிருந்து எனக்கு வந்த அறிவிப்பு என்றால் சரிதான். அதில் சர்வே எண். 23/61 என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். தாவா சொத்தில் எனக்கு எந்த உரிமை இல்லை என்பதால்தான் இதற்கு நான் பட்டா கேட்கவில்லை என்றாலும் நான் பட்டா கேட்பதாக பொய் சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. தாவா சொத்து வருவாய் ஆவணங்களில் அரசுக்கு பாத்தியப்பட்ட சர்க்கார் புறம்போக்கு என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் எனக்கு தெரியாது. சர்வே எண். 23/61 அரசுக்கு பாத்தியப்பட்ட சர்க்கார் புறம்போக்கு என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் எனக்கு தெரியாது. சர்வே எண். 23/61 ற்கு வடக்கே சர்வே எண்.23/5 உள்ளது, அது யார் நிலம் என்றால் எனக்கு தெரியாது. சர்வே எண்.23/5ல் எந்த உரிமையும் கோரவில்லை என்றால் சரிதான். தாவா சொத்து அரசு புறம்போக்கு சொத்து என்றாலும் பொது மக்கள் பயன்பாட்டில் இருந்து வருகிறது என்றாலும் சரியல்ல. நான் நெல் போட்டு களம் அமைப்பதாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனது எதிர்வழக்குரையில் நான் தாவா சொத்தில் நெல் போட்டு களம் அமைப்பதாக கூறியுள்ளேனா என்றால் கூறவில்லை. தாவா கிராமத்தில் 35 வீடுகள் உள்ளது. 161 பேர் ஜனத்தொகை உள்ளது. பிவாசாஆ 3 மூலம் மேற்படி கணக்கினை சொல்கிறேன்.

4. வாக்காளர் ஜாபிதா ஏதேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் செய்யவில்லை. வாதிகள் ஊர் பொதுமக்கள் பிரதிநிதியாகதான் வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றும் அதனை ஆட்சேபிக்க எனக்கு உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. அரசாங்கம் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையில் தாவா சொத்தில்

எனக்கும் 2ம் பிரதிவாதிக்கும் எந்த உரிமையும் இல்லை என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

**மறு விசாரணை –**

இல்லை.